# அனைத்து மெட்ரோ ரயில்களிலும் எல்.இ.டி. திரைகள்

## 2022-க்கு முன்பாக நிறுவ மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டம்

**சென்னை, ஜூலை 9:** மெட்ரோ ரயில் பயணத்தின் போது, குறிப்பிட்ட ரயில் நிலையத்தைப் பயணிகள் எளிதாக அணுகுவது தொடர்பான விவரம், முக்கிய இடங்களின் விவரம் உள்பட பல்வேறு முக்கிய தகவல்களை அறியும் வகையில், அனைத்து மெட்ரோ ரயில்களில் எல்.இ.டி. திரைகளை நிறுவ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. வரும் 2022-ஆம் ஆண்டுக்கு முன்னதாக எல்.இ.டி. திரைகள் நிறுவப்படும் என்றும் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.



சென்னை மாநகரில் 2 வழித்தடங்களில் 52 மெட்ரோ ரயில்கள் மூலமாக, 55 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது. கரோனா நோய்த்தொற்று பரவுவதற்கு முன்பாக, சென்னை மெட்ரோ ரயில்களில் தினசரி 1.20 லட்சம் பேர்பயணம் செய்தனர். தற்போது, அந்த அளவுக்கு பயணிகள் இல்லாவிட்டாலும், பொதுமுடக்கம் தளர்வுகளுக்கு பிறகு, கரோனா தடுப்பு வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி பாதுகாப்பான பயணத்தை மெட்ரோ ரயில் நிறுவனம் அளித்து வருகிறது. மெட்ரோ ரயில் பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதுதவிர, மெட்ரோ ரயில் பயணிகளுக்காக, பல்வேறு வசதிகளை செய்து வருகிறது.

**52 ரயில்களில் எல்.இ.டி. திரைகள்:** இந்நிலையில், மெட்ரோ ரயில் பயணிகள், பயனுள்ள பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில், அனைத்து மெட்ரோ ரயில்களில் எல்.இ.டி. திரை நிறுவ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திரை முன்மாதிரியாக நிறுவப்படவுள்ளது. இது, ஆறு மாதங்களில் தயாராகும். இந்த டிஜிட்டல் திரைகள் மூலமாக, பயணச்சீட்டு அல்லாத வருவாய் வாய்ப்பு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இந்த டிஜிட்டல் திரைகளில் விளம்பரங்களை ஒளிபரப்புவது மூலமாக, வருவாய் ஈட்ட உதவியாக இருக்கும். இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

மெட்ரோ ரயில்களின் தானியங்கி கதவுகளுக்கு மேலே உள்ள இடத்தில் திரைகளை பொருத்த ஒரு நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டின் இறுதியில் திரையின் முன்மாதிரி தயாராக இருக்கும். 2022-ஆம் ஆண்டுக்கு முன்னதாக, எல்.இ.டி. திரைகளில் பயணிகளுக்கான தகவல்கள் காட்சிப்படுத்த தயாராகி விடும்.

ஒரு ரயிலின் 4 பெட்டிகளில் உள்ள தானியங்கி கதவுகளுக்கு மேலே இந்த திரைகள் இருக்கும். 10 புதிய ரயில்கள் உள்பட 52 ரயில்களில் இந்த எல்.இ.டி. திரைகள் நிறுவப்படவுள்ளன.

**பல்வேறு தகவல்கள் காண்பிக்கப்படும்:** ஒவ்வொரு பெட்டிகளிலும் இரண்டு திரைகள் இருக்கும். இதில், பயணிகளுக்கான பயனுள்ள தகவல் ஒளிபரப்பு செய்யப்படும். இந்த திரைகளில் பாதையின் வரைபடம் தொடர்பான விவரம் காட்சிப்படுத்தப்படும். ரயில்நிலையத்தை ரயில் நெருங்கும்போது பயணிகளுக்கு தகவல் தெரிவிக்கப்படும். ரயில்நிலையத்தில் உள்ள வசதிகள், ரயில்நிலையத்தை சுற்றியுள்ள இடங்கள் உள்பட பல்வேறு தகவல்கள் காட்சிப்படுத்தப்படும். இந்த திரைகள் மெட்ரோ ரயில் சிக்னல் முறையுடன் இணைக்கப்பட்டு இருக்கும்.

ரயில்நிலையத்தை மெட்ரோ ரயில் நெருங்கும்போது, குறிப்பிட்ட நிலையம் மற்றும் இருப்பிடம் தொடர்பான தகவல் காண்பிக்கப்படும் என்றனர் அவர்கள்.